பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 09 2024 12 40
புதன்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. உற்பத்திக்கான இந்தியா இயக்கம் வெற்றி பெறுவதற்கு கடந்த பத்து ஆண்டுகளாக அயராது பாடுபட்ட அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.
2. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவை இரண்டாம் கட்ட தேர்தலில் காரலை 11 மணி நிலவரப்படி 24 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.
3. பண்டிட் தீன்தயாள் உபாத்தியாயாவின் பிறந்த தினத்தையொட்டி பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.
4. பாரிஸ் பாராலிம்பிக்கில் பதக்கங்களை வென்ற தமிழகத்தைச் சேர்ந்த வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.
5. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிர்வாகக்குழுக் கூட்டம் மும்பையில் இன்று நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இந்தியாவை உற்பத்தி மையமாகவும், புதிய கண்டுபிடிப்பின் சக்தியாகவும் உருவாக்க வேண்டுமென்ற 140 கோடி மக்களின் கனவாக உற்பத்திக்கான இந்தியா இயக்கம் திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இந்த இயக்கம் தொடங்கப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்த இயக்கத்தின் உந்து சக்தியின் விளைவாக நாட்டில் .உற்பத்தி பெருகி ஏற்றுமதி அதிகரித்துள்ளதாகவும், இதனால் இந்திய பொருளாதாரம் வலுப்பெற்றிருப்பதாகவும் கூறியுள்ளார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின் வெற்றிக்காக அயராது பாடுபட்ட அனைவருக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

உற்பத்திக்கான இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டு இன்றுடன் பத்து ஆண்டுகள் நிறைவடைகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான பல திட்டங்கள் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு, நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014-ஆம் ஆண்டு இதே நாளில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு கொண்டு வந்த உற்பத்திக்கான இந்தியா இயக்கம் அதிக அளவு முதலீடுகளை ஈர்த்து உலகத்தரத்திலான புதிய கண்டுபிடிப்புகளை கொண்டு வந்துள்ளது.

உலகின் உற்பத்தி மையமாக இந்தியாவை உயர்த்தும் வகையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய பொருட்கள் தரமானவை என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் பல்வேறு தொழில்களுக்கும் ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

அதிக அளவில் புத்தாக்க தொழில் நிறுவனங்களை கொண்டு வந்து புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் இந்த இயக்கம் துணை புரிந்துள்ளது.

புத்தாக்க தொழில்கள் மூலம் கடந்த பத்து ஆண்டுகளில் ஒன்று புள்ளி ஐந்து மில்லியன் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின் கீழ் அதிக அளவில் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு, உலகின் 50 சதவீத தேவையை இந்தியா பூர்த்தி செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சுதந்திரப் போராட்ட தியாகியும், பாரதீய ஜனசங் தலைவர்களில் ஒருவருமான பண்டிட் தீன்தயாள் உபாத்தியாயாவின் பிறந்த தினத்தையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி, உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள சமூக வலைதள செய்தியில், நாட்டின் கடைகோடியில் வசிக்கும் மனிதனும் வளர்ச்சியின் பயனை பெற வேண்டுமென்ற பண்டிட் தீன்தயாள் உபாத்தியாயாவின் சிந்தனை விலைமதிக்க முடியாதது என்று கூறியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்காக தேசிய சிந்தனையுடன் அவர் ஆற்றிய அரும்பணிகள் போற்றத்தக்கவை என்றும், அவருடைய அர்ப்பணிப்பு உணர்வும், சேவை மனப்பான்மையும் என்றென்றும் நினைவு கூரத்தக்கவை என்று குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா விடுத்துள்ள செய்தியில், பண்டிட் உபாத்யாயாவின் அந்த்யோதயா சிந்தனை சமூக நல்லிணக்கத்திற்கு வலு சேர்த்திருப்பதாகக் கூறியுள்ளார்.

சிறந்த சுதந்திரப் போராட்ட வீரராக மட்டுமன்றி அரசியல் சிந்தனையாளராகவும் அவர் திகழ்ந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவரின் கலாச்சார அடிப்படையிலான தேசியவாத கொள்கைகள் வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் நலத்திட்ட உதவிகள் கடைகோடியில் உள்ள மனிதரையும் சென்றடைய வேண்டுமென்ற பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்கு பார்வையையும் உள்துறை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய பொருளாதார தத்துவத்தை உருவாக்கித் தந்தவர் பண்டிட் தீன்தயாள் என்றும் திரு அமித்ஷா புகழாரம் சூட்டியுள்ளார்.

மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், சுதேசி கொள்கையில் மிகவும் ஆழமான நிலைப்பாட்டை கொண்டிருந்த பண்டிட் தீன்தயாள் உபாத்தியாயா நாட்டிற்காக பல தியாகங்களை செய்துள்ளதாக கூறியுள்ளார்.

சுதந்திரப் போராட்டத்தின்போது மக்களிடையே சுதந்திர கருத்துக்களை விதைக்கும் நோக்கில் பத்திரிகை நடத்தியவர் என்றும், சிறந்த பொருளாதார வல்லுநராகவும், தத்துவ ஞானியாகவும் பண்டிட் உபாத்தியாயா திகழ்ந்தார் என்றும் திரு எல் முருன் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு தற்போது அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது.

காலை 11 மணி நிலவரப்படி 24 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

காலை ஏழு மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

இந்த யூனியன் பிரதேசத்தில் 26 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இன்று இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தலை சுமூகமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு ஏதுவாக அனைத்து வாக்குச்சாடிகளிலும் வாக்குப்பதிவை தேர்தல் ஆணையம் இணையதளம் மூலம் கண்காணித்து வருகிறது.

இதனிடையே ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலை பார்வையிட 15 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்துள்ளனர்.

அமெரிக்கா, மெக்ஸிகோ, கயானா, தென்கொரியா, தென்னாப்பிரிக்கா, தாக்சானியா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்துள்ளனர்.

[]<<<>>>[]

பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகளில் வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்கள் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த துளசிமதி முருகேசன், நித்யஸ்ரீ சிவன், மனிஷா ராமதாஸ், மாரியப்பன் தங்கவேலு ஆகியோருக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் மாநில அரசின் பரிசுத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

பட்டு மற்றும் பருத்தி ரகங்கள் நெசவாளர்கள் ஆறு பேருக்கு விருதுகளையும், பாராட்டு சான்றிதழ்களையும் முதலமைச்சர் வழங்கினார்.

சிறந்த ஆடை வடிவமைப்பாளர்களுக்கும் திரு மு க ஸ்டாலின் பரிசு வழங்கி கௌரவித்தார்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மூன்றாவது முறையாக பதவியேற்று 100 நாட்கள் நிறைவடைந்த நிலையில் 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கட்டமைப்பு மற்றும் விவசாயிகள், நடுத்தர பிரிவினர், மகளிர் மற்றும் இளைஞர்களுக்கான திட்டங்கள் இவற்றில் அடங்கும்.

100 நாட்களில் மத்திய அரசு பல சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி இருப்பதாக விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த திரு வேலு தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - மகேஸ்வரன்) ----43 செகண்ட்*

[]<<<>>>[]

உலகப் புகழ்பெற்ற ஸ்டார்ன்போர்டு பல்கலைக்கழகத்தின் சிறந்த விஞ்ஞானிகள் பட்டியலில் வேலூரில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் ஜெ மாதவன், எம் சையத் அலி, ஆ ராஜசேகர் இந்த ஆண்டின் தலைசிறந்த பேராசிரியர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இது தங்களுக்கு கிடைத்த பெருமை என்று அவர்கள் கூறியுள்ளனர்.

*( சவுண்ட்பைட் - பேராசிரியர்கள் ) -70--- செகண்ட்*

[]<<<>>>[]

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிர்வாகக்குழுக் கூட்டம் மும்பையில் இன்று நடைபெறுகிறது.

பெங்களூருவில் வரும் 29-ஆம் தேதி பி சி சி ஐ ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இன்றைய கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

***End of News***